Registered as a Newspaper

# உதயன்

அன்பளிப்பு விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 17 புதன்கிழமை (31-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 66

# பாடசாலைகளை தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

## கல்வி நிலை குறித்து நடந்த கலந்துரையாடலில் தமிழ்ச்செல்வன்

சாவகச்சேரி, ஜனவரி. 31

பாடசாலைகளை விரைவில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக—

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தகவல் வெளியிட்டார்.

போராட்டத்தின் மத்தியிலும் கல்வியில் எந்தவித தளர்வுகளும் வந்துவிடாது கல்வியைப் பாதுகாக்க வேண்டும் என்பதே தேசியத் தலைவரது விருப்பம் —

அதன் பொருட்டு அனைத்து மாணவர்களும் தமது கல்வியைத் தொடர அனைவரது முயற்சிகளும் இணைக்கப்பட வேண்டும்— என்றும் அவர் சொன்னார்.

இன்றைய நிலையில் கல்வியை முன்னெடுப்பது தொடர்பாக, கடந்த சனிக்கிழமை கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறினார்.

வலயம் - 2 பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற 'இக்கலந்துரையாடலில் வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மற்றொரு நடவடிக்கை

கொழும்பு, ஜன .31

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் வார இறுதியில் அதிகரித்துள்ளதையடுத்து — காடுகளில் உள்ள விடுதலைப் புலிகளை தேடி அழிப்பதற்காக நேற்று இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நூற்றுக்கணக்கான படையினர் காடுகளில் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்த போதும் இந்த நடவடிக்கை பற்றிய முழு விவரத்தையும் அரசு வெளியிடவில்லை என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(இ-3-6-7)

## பெரும் எடுப்பில் ராணுவ நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலை

### கிழக்கு நிலவரம் குறித்து எல்மோ பெர்னாண்டோ

கொழும்பு, ஜன. 31

வலிகாமத்தில் இருந்து படைகளை வாபஸ் பெற முடியாத நிலையில்—

கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள தேவையான சிப்பாய்களை தேடும் பிரச்சினைக்கு அரசு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

பி. பி. ஸி சிங்கள சேவையில் அதன் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

''சூரிய பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையினால் யாழ்நகர் கைப்பற்றப்பட்டுள்ளதாயினும், வடக்கில் பூரணமாக விடுதலைப் புலிகளின் பலத்தை ஆட்டம் காணச் செய்யுமளவுக்கு தாக்குதல் நடந்துள்ளது என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 19 சடலங்கள் கரை ஒதுங்கியதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு!

கொழும்பு, ஜன. 31

கடந்த 22 ஆம் திகதி பலாலியில் இருந்து புறப்பட்டு காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட எம். ஐ. 17 ஹெலிக்கொப்டரில் சென்ற இராணுவ அதிகாரிகள் என நம்பப்படும் 19 பேரின் சடலங்கள் பருத்தித்துறையில் இருந்து ஐந்தரை மைல் தூரத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் ஒதுங்கியதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இராணுவ அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமையன்று 16 சடலங்கள் கரையெதுங்கின என்றும்—

பின்னர் நேற்று முன்தினம் 3 சடலங்கள் கரை ஒதுங்கின என்றும் — தெரிவிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

ஹெலிக்கொப்டர் எவ்வாறு அனர்த்தத்துக்கு உள்ளானது குறித்து இன்னமும் தெரியவில்லை என்றும்—

சீருடையும், சப்பாத்தும் சடலங்களுடன் காணப்பட்டதால் அவை அனேகமாக ஹெலியில் இருந்த படையினரின் சடலங்களாகவே இருக்க வேண்டும் என்றும் — ராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

(இ-3)

## வலிகாமத்தை விரைவில் நாம் கைப்பற்றுவோம்

### கரிகாலன் தெரிவிப்பு

'வலிகாமத்தை மீளக்கைப்பற்ற விடுதலைப் புலிகள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள்'' என்று விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் திரு. கரிகாலன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இக்கருத்தை தெரிவித்துள்ளார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இராணுவத்தின் பிடியில் உள்ள வலிகாமத்தில் இன்று பொதுமக்கள் இல்லை. ஆதலால் தாம் தாக்குதல் நடத்துவது எளிது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் —

திரு. கரிகாலனின் புகைப்படத்தை நேற்றைய கொழும்பு பத்திரிகைகளில் வெளியிட்ட பொலீஸார் இவர் பற்றிய தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.

## முல்லைத்தீவு பகுதியில் படையினர் ஷெல் வீச்சு

### சிறுவன் படுகாயம்

மந்திகை, ஜன. 31

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின்போது விஜயராசா விஜிந்தன் (வயது 8) என்ற சிறுவன் படுகாயம் அடைந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 2.30 மணி அளவில் செம்மலைப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலிலேயே இச்சிறுவன் காயமடைந்தான்.

பாதுகாப்புத் தேடி பதுங்குகுழி நோக்கி ஓடிய வேளையிலேயே இவர் ஷெல் வீச்சுக்கு உள்ளானார்.

சம்பவதினம் அளம்பில், செம்மலைப் பகுதியை நோக்கி அடுத்தடுத்து ஏழு ஷெல்கள் ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-173-15)

## தமிழீழ நீதிமன்றுகள் நாளை முதல் இயங்கும்

தமிழீழ மாவட்ட நீதிமன்றுகளின் செயற்பாடுகள் மீண்டும் நாளை வியாழக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதாக தமிழீழ நீதி, நிர்வாகத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் வலிகாமத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்ததையடுத்து நீதிமன்றுகளில் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

நீதிமன்றுகளில் வழக்கு நடவடிக்கையில் ஈடுபடும் சட்டவாளர்களுக்கு இன்று கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

(இ-3)

## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளித்தல்

சாவகச்சேரி, ஜன. 31

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த காரணத்தால் முதற்கட்ட மீளளிப்பின்போது மீளப் பெறாதவர்களுக்காக, இரண்டாம் கட்ட மீளளிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும்—

கடன் பத்திரத்தைத் தவறவிட்டவர்களின் நலன் கருதி, மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திரத் தொடர்பு எண்ணுடன் அவர்களின் முழுப்பெயரும் வெளியிடப்பட்டிருப்பதாகவும் நிதித்துறை அறிவித்துள்ளது.

மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரத்தைத் தவறவிட்டவர்கள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில், அடையாள ஆவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிலையில் இலை சுருட்டி நோய்

கைதடிப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள புகையிலைக் கன்றுகள் இலை சுருட்டி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளன.

இதற்குத் தெளிப்பதற்கான கிருமிநாசனியை இங்கு பெறமுடியாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-154)

# பங்கீட்டு அட்டை மீள் பரிசீலனை கிராமசேவகர் பிரிவுகளில் நிறுத்தம்

## இதுவரை பெறாதோருக்கு மாற்று ஏற்பாடு

சாவகச்சேரி, ஜன. 31

கிராம சேவகர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த பங்கீட்டு அட்டை மீள்பரிசீலனையும், இலவச சவர்க்கார விநியோகமும் நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை பங்கீட்டு அட்டை மீள்பரீசீலனை வேலைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை அதனைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்படியானவர்கள் தென்மராட்சியில் பிரிவு வலயச் செயலகங்களிலும் —

வடமராட்சியில் பிரதேச செயலர் பிரிவு அலுவலகங்களிலும் — தமது மீள்பரிசிலனை வேலைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான சவர்க்கார விநியோகமும் மேற்படி செயலகங்களில் வைத்தே மேற்கொள்ளப்படும் என்று யாழ் மாவட்ட திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார். (இ-7)

## திருட்டு

மட்டுவில், சந்திரபுரம் பகுதியில் நாற்றுமேடைகளிலும், விவசாய நிலங்களிலும் இருந்து கத்தரி, மிளகாய் நாற்றுக்கள் இரவிரவாக இனம்தெரியாதோரால் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மாலை நடப்படும் பயிர்கள் மறுநாள் காலை தண்ணீர் ஊற்றச் செல்லும்போது காணப்படுவதில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ-117)

# நிதித்துறை அறிவித்தல்
# வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை முதலாம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ திருமதி எஸ். சிவாஸ்காந்தா — மே/பா. நடராஜ் (ரைவர்), காளிகோவிலடி அருகில், வரணி வடக்கு, வரணி.

★ சிவசாமி ரஞ்சன் — மே/பா. ச. கருணாகரன், மீசாலை கிழக்கு, மீசாலை.

★ இ. தெய்வேந்திரம் — மே/பா. அருணாசலம் (போஸ்ட் மாஸ்ரர்), மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

★ பி. சின்னத்தம்பி — மே/பா. ராஜதுரை, மட்டுவில் தெற்கு, சிவன்கோவிலடி, சாவகச்சேரி.

★ திருமதி இ. இரத்தினம் — மே/பா. வி. சபா இரத்தினம், இளைப்பாறிய விதானையார், மீசாலை வடக்கு, மீசாலை.

★ ச. சுகிர்தலதா — மே/பா. கணபதிப்பிள்ளை, ஐயனார் கோவிலடி, கிளாலி, எழுதுமட்டுவாள்.

★ திருமதி கனகாம்பிகை — மே/பா. கே. தவேந்திரம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

★ காசித்தம்பி — மே/பா. வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை, கொடிகாமம்.

★ சின்னையா சுப்பிரமணியம்— மே/பா. சி. இராமலிங்கம், மீசாலை தெற்கு, மீசாலை.

★ திருமதி கே. அன்னப்பிள்ளை — லிங்க பவனம், மூளாய், சுழிபுரம்.

★ நா. தியாகராசா — தச்சன்தோப்பு, கைதடி.

★ சின்னையா ராஜ்குமார் — சித்த மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

★ து. இராஜகுலநாயகம் — மே/பா. மஞ்சுளா, கைதடி தெற்கு, கைதடி.

★ திருமதி வி. சந்திராவதி — மே/பா. எஸ். பாலசுப்பிரமணியம், ''குமார பவனம்'', நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ திருமதி யே. சிமியாம்பிள்ளை (எஸ். துரைசிங்கம்) — பழைய பொலீஸ் நிலையத்திற்கு முன், கண்டி றோட், சாவகச்சேரி.

★ சு. கந்தையா — சிவன் கோவிலடி, சுப்பிரமணியம் நடேஸ்வராக் குருக்கள், சாவகச்சேரி.

★ திருமதி சகுந்தலாதேவி யசோதரன் — ''அபிராமி'', மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ நா. கந்தையா — மே/பா. திருமதி ப. பரமேஸ்வரி, இல. 27, டச்சு வீதி, சாவகச்சேரி.

★ சிவசம்பு சிவனேசன் — மே/பா. த சுப்பிரமணியம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ கி. நடராசா — மே/ப நா. சிவஞானம், பெரிய மாவடி, சாவகச்சேரி.

★ வே. நாகமுத்து—மே/ப திருமதி ப. பரமேஸ்வரி, இல 27, டச்சு வீதி, சாவகச்சேரி.

★ ரி. தவநாயகம் — இலங்கைவங்கி, சாவகச்சேரி.

★ க. வல்லிபுரம் (நல்லம்மா) — பாலத்திடல், சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

★ மா. தியாகராசா — மே/பா தி. கார்த்திகேசு, 247, 2ஆம் குறுக்குத் தெரு, கச்சாய் றோட், சாவகச்சேரி.

★ திருமதி ராகினி சர்வானந்தம் — S. L. R. C, மில் ஒழுங்கை, சாவகச்சேரி.

★ சரஸ்வதி தம்பித்துரை அல்லது தவபாஸ்கரன்— மே/பா பொ. சின்னத்துரை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ சரவணமுத்து கணேசமூர்த்தி—மட்டுவில் வடக்கு, தோப்பு ஒழுங்கை. அம்மன் வீதி, சாவகச்சேரி.

★ வேலுப்பிள்ளை ஐயாத்துரை — மே/பா ஏ. செல்லத்துரை, புதிய ஒழுங்கை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ முருகேசு சிவசம்பு சிவனேசன் — மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ சீதாதேவி கணேசமூர்த்தி — வாகையடி லேன், மட்டுவில், சாவகச்சேரி.

★ லீலாவதி சபாபதி — மே/பா எஸ். தம்பு, சாவகச்சேரி

★ மாரிமுத்து நவரத்தினம் — சாவகச்சேரி பிரதேச சபை, நாவற்குழி, கைதடி.

★ பண்டிதர் விநாயகமூர்த்தி நவரத்தினம் — யேரம்பலம் வீதி, கச்சாய், சாவகசசேரி.

★ திருமதி ஜெயவதி பூலோகநாதன் — இல. 17, மண்டபத்தடி ஒழுங்கை, சாவகச்சேரி தெற்கு, சாவகச்சேரி

★ கிரேசியன் ஹார்த்துநாயகி — நுனங்கிளப்பு, சாவகச்சேரி.

★ சரவணமுத்து கிருஷ்ணபிள்ளை — மட்டுவில் வடக்கு, தோப்பு ஒழுங்கை, அம்மன் வீதி, சாவகச்சேரி.

★ முருகேஸ் பாலசிங்கம் — ஜோதிரவி வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ சின்னப்பு சிதம்பரப்பிள்ளை — மந்துவில் மேற்கு, மந்துவில். (இ)

## உதவிப் பணம் தாமதம்

வடமராட்சி, ஜன. 31

வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள உபதபாலகங்கள் ஊடாக மாதாந்த உதவிப் பணம் வழங்கும் வேலைகள் மிகத் தாமதமாகவே நடைபெற்று வருகின்றன என்றும் —

இதனால் மாதாந்த உதவிப்பணத்தை நம்பியுள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## மானிப்பாய் ப. நோ. கூ. ச. வன்னிக்கு

சாவகச்சேரி, ஜன. 31

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் முழுமையாக வன்னிப் பகுதிக்கு இடம் மாற்றப்பட உள்ளது.

இந்தச் சங்கம் வன்னிப்பெரு நிலப்பரப்பில் தனது தலைமைக் காரியாலயத்தையும் இதர கிளைகளையும் அமைத்து செயல்பட உள்ளது. (இ-7)

## தெரு நாய்கள் தொல்லை அதிகரிப்பு

அல்வாய், ஜன. 31

அல்வாய், வியாபாரி மூலை பகுதிகளில் தெரு நாய்களின் தொல்லை அண்மைக் காலங்களாக அதிகரித்துள்ளது.

இந் நாய்களின் தொல்லைகளால் பாதசாரிகள் பாதிப்படைந்துள்ளதோடு —

விசர் நாய்க்கடிக்கு உள்ளாகி ஒரே நாளில் இரு சிறுவர்கள் கடந்த வாரம் மரணமடைந்தும் உள்ளனர்.

நல்லூரில் இருந்து இடம் பெயர்ந்து வியாபாரி மூலையில் வசித்து வந்த சிறிவேல் நாதன் பிரணவன் (வயது 16) என்பவரும் —

வியாபாரி மூலையைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் ரகு (வயது 8) என்பவருமே மரணமடைந்தவர்களாவர்.

மரணமடைந்த இராமகிருஷ்ணன் ரகு என்பவர் தனது தாயாருக்கும் கடித்து காயம் ஏற்படுத்தியுள்ளார். (இ-152)

## வடமராட்சியில் போர்க்கால இன்னிசை

வடமராட்சி, ஜன. 31

வடமராட்சிப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்கால இன்னிசை விருந்தும், சமகாலம் தொடர்பான கருத்தரங்கும் கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன. (இ-173)


வடமராட்சியில்

**உதய சேவை**

**வடமராட்சி வாழ் மக்களே!**

காலை எழுந்தவுடன் உங்களைத் தேடி உங்கள் நண்பன் ஒருவன் ஓடி வருகின்றான்.....
ஆம்; உண்மை தான்....!

உங்கள் அபிமான நாளிதழ் உதயனை உதய வேளைப் பொழுதில் உங்களது வீட்டிலேயே பெற்றுக் கொள்ள

**உதய சேவை**
ஆரம்பமாகிவிட்டது

விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**உதயன் கிளை நிலையம்**
பழைய பஸ் நிலைய சதுக்கம், பருத்தித்துறை.

**மெசின் மைண்டர் தேவை**

Hand Feeding Cylinder Machine இயக்குவதற்கு அனுபவமுள்ள மைண்டர் தேவை.

நேரில் வரவும்

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி

**சுகந்தன் மருந்தகம்**
**இடமாற்றம்**

கொக்குவிலில் இயங்கிய எமது ஸ்தாபனம்
இன்று 31-01-96 முதல்

**பெரிய அரசடி, சங்கத்தானை**

எனும் முகவரியில் ஆரம்பமாகிறது என்பதனை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

(40294) —சுகந்தன் மருந்தகம்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**ஆசிரியர் கூட்டம்**

நேரம்: மு. ப. 9. 30 மணி
காலம்: வெள்ளிக்கிழமை 02 - 02 - 1996
இடம்: சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி

தயவுசெய்து எமது ஆசிரியர்கள் தவறாது சமுகம் தரவும்.

நன்றி

இ. மகேந்திரன்
அதிபர்

(சி/2957)

சுப முகூர்த்த பட்டுப் புடைவைகளை எண்ணம்போல் தெரிவு செய்ய

**யாழ். சிவகணேசன் பட்டுச் சோலை**

இல. 03, நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (சி/2959)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அருட்திரு க. ஜோண் லொறட் அடிகள்
## நித்தியமெய்திய 31ஆம் நாள் நினைவஞ்சலி மலர்
31 – 01 – 1996

## அஞ்சலிகள்

### உன் நினைவில் சங்கமிக்கும் எம் இதயம்

அன்பான தம்பி லொறட்,

எமது யாழ். மறைமாவட்ட குருக்குடும்பத்தின் கடைசித் தம்பி நீ. உன் குருப்பட்ட நாளில் உன்னை ஆரத்தழுவி முத்தமிட்டு நாம் மகிழ்ந்தபோது உன் செல்லப் புன்கையால் எமக்கு நன்றி சொன்னாயே. உன் குருத்துவ வாழ்வின் ஓரிரு மாதங்கட்குள் உன் ஆற்றலையும், திறமைகளையும் கண்டு எம்மை பெருமையடையச் செய்தாயே. எம்மோடு ஒன்றித்திருக்க ஆசைகொண்டு ஓடி ஓடி வருவாயே. உனது ஆழ்ந்த சிந்தனையாலும் அசையாத விசுவாசத்தாலும் குருத்துவத்தின் மகத்துவத்தை மீண்டும் எமக்கு நினைவூட்டினாயே. உன் பிரிவை எம்மால் தாங்க முடியாமல் இருப்பதற்கு இவைகள் தான் காரணமோ!

உன் மறைவு தற்காலிகமானது தான் என்பதும் மீண்டும் நாம் ஒரே குடும்பமாய் இணைந்து வாழ்வோம் என்பதும் அப்பட்டமான உண்மை என்று எண்ணும்போது உன் பிரிவின் துயரிலும் ஆச்சரியமான மகிழ்ச்சியடைகின்றோம். அதுவரை மண்ணில் நீ தொடங்கிய பணியை விண்ணில் தொடருவாய் என்ற நம்பிக்கையோடு எம் பணி தொடர்கிறோம். ஆயினும் உன் நினைவு மட்டும் எம்மைவிட்டு என்றும் அகலாது.

ஆயரும் சக குருக்களும்.
யாழ். மறைமாவட்டம்

### ஆண்டவரை வேண்டிடுவீர்

ஆண்டாண்டு காலம் குரவருக்காய் வேண்டி
வந்தனர் – அதனால்
ஆண்டவர் கொடுத்தார் முதற்குரவர் யோண்
லொறட்டை
ஆண்டு பல வாழ்கவென அறிஞர்கள் வாழ்த்
துரைத்தார் - ஆனால்
ஆண்டொன்று வரமுன்னே அமலனடி
சேர்ந்தீரோ
ஆளுமையும் அறிவுமுண்டு அதற்குரிய
குணமுமுண்டு - அதனால்
ஆண்டவரின் போதனையை அயராது எடுத்
துரைத்தீர்
ஆசி பல வேண்டிட ஆவலுடன்
காத்திருந்தோம் – ஆனால்
ஆண்டவன் சந்நிதிக்கு நீர் அவசரமா சென்று
விட்டீர்
அன்புள்ளம் கொண்டவர்கள் அமைதியின்றி
வாழ்கிறார் - அதனால்
ஆண்டவனை வேண்டிடுவீர் அமைதியுடன்
வாழ்வதற்கு

புனித அந்தோனியார் ஆலய
இறைமக்கள்.
தாளையடி.

### அருள்வாய் இறைவா!

அருட்தந்தையே,
எங்கள் பங்கில் நின்முகம் கண்டோம்
சின்னக் குழந்தைகள் உன்னைச் சுற்றிட
வண்ணக் கதைகள் சொல்லி மகிழ்வீர்
அந்தக் கதைகள் இன்று கனவோ?
பங்கு மக்கள் படுந்துயர் தன்னை
ஆற்றுவார் யாரோ அருள்வாய் இறைவா

மட்டுவில் பங்குத்தந்தையும்
பங்குமக்களும்

### இழந்த எம் இனிய அண்ணாவுக்கு...

எட்டு வருடம் எம் நடுவில்
எரியும் சுடராக நீயிருந்தாய்....
நினைவிலே நீங்காத
விந்தைகள் பலவும் நீ புரிந்தாயே....
செக்கச் சிவந்த உன் கண்களால்
எம்மைச் சுண்டி இழுத்தாயே,...
கதறி அழுகின்றோம்
காத்து இருக்கின்றோம்
மீண்டும் காணுவோமா உன்னை....
காணுவோம் மீண்டும் — நம்
தந்தையின் வீட்டில்
அன்பே உன்னுடன் பேசுவோம்
சேர்ந்து மகிழுவோம் —அந்த
முடிவில்லா வாழ்வில்.

புனித சவேரியார் குருமட
தம்பிமார்.
உருத்திரபுரம்.

## ஓர் ஈழத்தமிழ் இளங்குருவின் மரணம்

ஜோண் லொறட், வலிகாம இடம்பெயர்வின்போது இடம்பெயர்ந்து வந்து, இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலே வாழ்ந்து, பணியாற்றிக் கொண்டிருந்த போது நோயினால் பீடிக்கப்பட்டு மரணமானவர்.



அருட்திரு
ஜோண் லொறட் அடிகள்

பத்தே மாதங்கள் கத்தோலிக்க குருவாகப் பணிபுரிந்து தனது இளவயதிலேயே இறைபதமடைந்த இவர் சாதித்தவை பெரிதாக எதுவுமில்லைத்தான். இவருடையவாழ்வும் பணியும் கூட மிகவும் சாதாரணமானவையே. இவருடைய வாழ்வினதும் பணியினதும் இந் சாதாரணத் தன்மையே இறப்பிலே இவரை ஒரு அசாதாரணமானவராக மாற்றியிருந்தன.

இவர் மற்றவர்களாலே அறியப்படவும் நினைக்கப் படவும் வேண்டியிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று இளவயதினராகவும் கத்தோலிக்க குருவாகவும் இருந்த இவர் சாதாரண காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு மரணமானார் என்பது. இரண்டாவது இவரது மரணத்தின் மூலகாரணம் இவரைப் பீடித்த நோயல்ல இவர் தேர்ந்து கொண்ட வாழ்க்கை முறை என்பது.

### இவர் தமிழர் வாழ்நிலையின் குறியீடு

இவரது மரணத்தின் முதற் காரணம் இவரை இன்றைய தமிழர் வாழ்நிலையின் குறியீடாக உயர்த்தி வைக்கிறது. இன்றைய வடபகுதியில் சாத்தியமான அதியுயர் சிகிச்சை காய்ச்சலினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்ட ஒருவருடைய உடற்குறையின் காரணகாரியங்களைக் கண்டு குணமளிக்க முடியாதளவிற்கு பலவீனமடைந்திருக்கிறது என்பது கருத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஷெல் வீச்சினாலோ குண்டுத் தாக்குதலினாலோ அல்லாமல் சாதாரண நோய்களினாலே, போதிய மருந்து வசதியும் மருத்துவ கண்காணிப்பும் இல்லாத காரணத்தினாலே நாளாந்தம் இறந்து போகின்ற எத்தனையோ முகமிழந்த அனாமதேயத் தமிழர்களின் ஒட்டுமொத்த முகமாக இவர் கருதப்பட வேண்டியவராகிறார்.

ஆக, அவருடைய கல்லறையருகில் அவருடைய நினைவுகளால் சோகம் தரித்திருக்கும் நாங்கள் தமிழரின் இன்றைய வாழ்நிலை அவலத்தின் குறியீடாக தன்னையே அர்ப்பணித்திருக்கும் அவருக்கு அஞ்சலியாக அந்த குறியீட்டின் உட்பொருளை இயன்றவரை எடுத்துரைப்போம். தமிழ் மக்கள் எதிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இளைஞர் சமுதாயத்தின் இழப்பு

யாழ் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் துடிப்புமிக்க அங்கத்தவர்களின் முன்னணி வகித்தவர் அருட்தந்தை லொறட். மேய்ப்புப்பணி மாநாட்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் ஆணைக்குழு குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சியடைந்தது. லொறட்டின் முயற்சியின் விளைவு என்றால் அது மிகையல்ல.

பேராலயப் பங்கில் பெரும்பணிகள் இருந்தபோதும் தன் ஓய்வுநேரங்களை தியாகம் செய்து இளைஞர், யுவதிகளை பங்குகளுக்குசென்று நேரடியாகச் சந்தித்து அவர்களை ஊக்குவித்து வந்ததையும், புதிதாக பல இளைஞர் மன்றங்கள் உருவாக காரணமாக இருந்ததையும் நினைத்து இளைஞர் ஆணைக்குழு அனைத்து இளைஞர் யுவதிகள் சார்பிலும் நன்றி கலந்த அஞ்சலியைச் செலுத்துகின்றது.

உன் ஆன்மா நித்தியத்துக்கும் இளமைப் பொலிவோடு வாழ இறைவனை இறைஞ்சிநிற்கின்றோம்.

-யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு

குருவே,

ஆலயம் ஆரம்பித்து 125 ஆண்டுகளின் பின் முதற் குருவாக வந்து இம்மண்ணுலகிலே எமக்குப் பெருமை தேடித் தந்தாய். பத்தே மாத உனது சாட்சிய வாழ்வாலும் தியாக மரணத்தாலும் விண்ணிலும் எமக்குப் பெருமை சேர்த்து விட்டாய்.

உனது பிரிவால் துயரமும் சாட்சியத்தால் பெருமையும் கொள்ளும்.

புனித பிலிப்பு நேரியார் ஆலய மக்கள்,
செம்பியன்பற்று.

அருட் தந்தையே!

உமது இவ்வுலக குறுகிய பணிக்காலத்திலே உமது பணியை நிறைவாகப் பெறும் பாக்கியத்தை நாங்கள் பெற்றோம். மேய்ப்புப் பணி மாநாட்டின் இலட்சியங்களை எமது பங்கிலே நடைமுறைப்படுத்த கடுமையாக உழைத்தீர். உமது கனவான இறையரசுக் குழுமங்கள் எங்கும் உதயமாகட்டும், திருச்சபை புத்துயிர் பெறட்டும். இதற்காக இறைவனிடம் பரிந்து பேசும்.

அருட்திரு. அன்ரன் இராஜநாயகம்,
& பங்குத்தந்தையர்கள்,
பேராலய இறைமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலிகள்

### உம்மை நாம் சந்திப்போம்

சடுதியான உன் மரணம்
சற்றும் நாம எதிர்பார்க்காதது
சஞ்சலங்கள் நாம் அடையும் போது
நீயும் எங்களுடனே அமர்ந்திடுவாய்
அழுகின்றோம் நாம் இன்று
அல்லற் படுகின்றோம்
யார் தான் எமக்கு இங்கு உதவிடுவார்
சந்திப்போம், உம்மை நாம்
சந்திப்போம்
தரிசன பூமியிலே.........
உன் நினைவில் வாடும்

புனித சவேரியார் ஆலய
இறைமக்கள்
நாகர் கோவில்

### பங்கிடாப்பணி

அருட்தந்தையே

உமது பணித்தளம் எமது பக்கத்துப் பங்குதான். ஆனால் நீர் உமது பணியை பங்கு பார்த்துப் பங்கிடவில்லையே. இறையரசின் மலர்விற்காய் முழு மூச்சாய் உழைத்தீர். எம்மிடையே நீர் செய்த அனைத்து இறைபணிக்கும் நன்றிகள். இறையரசின் விடிவிற்கு உமது தியாகம் வித்தாகட்டும்.

குருநகர் பங்குத்தந்தையர்களும்,
பங்கு மக்களும்.

### வழிகாட்டி நீ

இளைஞர் எம் மத்தியின் - தன்
இலட்சியம் வேறாக்கி அதை இறையாக்கி
ஈரைந்து மாதங்கள் இறைபணி செய்ய
உதித்தான் எம் பங்கில் ஓர் இளைஞன்
இளைஞர் எமக்கு வழிகாட்டியாய்
இறைமகன் யேசுவில் பிரகாசமாய்
இறைமக்கள் யாவருக்கும் ஒளிகாட்டியாய்
இறை புகழ் வாழ தன்னை இரையாக்கினான்

காலமகள் செய்துவிட்ட கோலமிதோ
கர்த்தர் தான் பணித்துவிட்ட பணிப்
புரையோ
காலமொரு நாள் கனிந்து வரும் எம் வாழ்வில்
- அன்று
களிப்புடன் கண்டிடுவோம் வான் வீட்டில்.

கத்தோலிக்க இளைஞர்
மன்றம்.
தாளையடி.

### என்றென்றும் வாழ்கின்றீர்

சிறுவர்களின் அண்ணனாய்
இளைஞரின் நண்பனாய்
ஊரவரின் குருமணியாய்
பூத்து, புத்தாண்டில் உதிர்ந்தவனே
என்றென்றும் வாழ்கின்றீர்.
எம் முள்ளத்தில் வாழ்கின்றீர்

புனித யூதாதேயு ஆலயமக்கள்
நெல்லியான்

### கண்ணீருடன் ஒரு மடல்.

அருட் தந்தைக்கு

உன் புன்னகையில் தெரிந்திடுமே
களங்கமற்ற உன் உள்ளம்
நீ........கொஞ்சம் கறுப்புத்தான் — ஆனால்
அழகு வதனத்தால் உன் விடுமுறையில் —
எமக்கு
ஆயிரம் கதைகள் சொல்வாயே...... ...
வாடிய உன் முகத்தை — நாம்
சொப்பனத்திலும் கண்டதில்லை.
ஏன்......... உன் ஆவி போனபின்னும் காண
வில்லை.
சிரித்தாய்......... இறப்பிலும் நீ சிரித்தாய்.
ஏன் குருவே நீ சிரித்தாய்
எம்மில் கண்ணீர் கறப்பதற்கா.........?
எம்முடன் மகிழ்ந்திருந்தது
எம்மை விட்டு பறப்பதற்கா.........?
நீ இறக்கவில்லை எங்கோ சென்று விட்டாய்
எப்போது குருவே நீ திரும்புவீர்.........

உனக்காகக் காத்திருக்கும்
கார்மேல் மாதா ஆலய மக்கள்
குடாரப்பு

(40289)

## சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

சொனி T.V., நஷனல் டெக், T.V.S. சாம் (இந்தியன் தயாரிப்பு) மோட்டார் சைக்கிள், சிங்கர் தையல் மெஷின், ஏஸியா லேடீஸ் சைக்கிள். விலாசம் A. ஜெயபாலன், C/o வி. கமலாதேவி, சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (40273)

### வீடு விற்பனைக்கு

சரசாலை தெற்கு, கனகம் புளியடிச் சந்திக்கு அருகாமையில் புத்தூர் வீதியில், தற்பொழுது சரசாலை உபதபாற்கந்தோர் அமைத்திருக்கும் வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு, நேரில் தொடர்பு கொள்ளவும். (40291)

### அறை தேவை

சாவகச்சேரி, கொடிகாமம் உள்ளடங்கிய இடத்தில் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு ஓர் அறை தேவை வாடகை தரப்படும். நேரில் பேசிக் கொள்ளலாம். கூடிய விரைவில் தபால் மூலம் அறியத் தரவும். இல: 521 C/o உதயன், சரசாலை தெற்கு. (40288)

### கண்டெடுக்கப்பட்ட பாக்

26. 01. 96 மாலை 6.30 மணியளவில் கிளாலி துறைக்கு அண்மையில் ஓர் பாக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். V.P. தியாகராஜா, ''லஷ்மி'' மடத்தடி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (40035)

### தேவா ரெயிலர்

வாடிக்கையாளர்கள் தங்கள் உடுப்புக்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.

தேவ

தேவசகாயம்
(மூப்பர்)
மாதாகோவிலடி.
புலோப்பளை
(40291)


# கடற்படைக்கும், விமான படைக்குமே கடந்த 9 மாத காலத்தில் பேரிழப்பு

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்து கடந்த ஒன்பது மாதங்களில் ஸ்ரீலங்கா கடற்படை, விமானப்படை ஆகியன பலத்த இழப்புகளைச் சந்தித்திருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா விமானப்படை ஒன்பது வான் கலங்களையும் 56 விமானிகள் உட்பட 62 விமானப் படையினரையும் இழந்துள்ளது. இந்தச் சம்பவங்களில் சுமார் இருநூற்றியம்பது உயிர்கள் பலியாகியுள்ளன.

இழக்கப்பட்ட விமானங்களில் 5 விமானங்கள் முக்கியமான இராணுவப் போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டவை. ஒன்று''புக்காரா'' ரக தாக்குதல் ஜெட் விமானமாகும்.

இவற்றை விட பெல்ரக ஹெலிகள் இரண்டு, எம். ஐ. 17 ரக ஹெலி ஒன்று ஆகியவற்றையும் விமானப்படை இழந்துள்ளது.

ஸ்ரீலங்கா விமானப்படை இழந்துள்ள விமானப்படையினரில் 54 பேர் சிறந்த போர் முனை அனுபவம் பெற்றவர்களாவர். இவர்களுள் மூன்று குறூப் கப்டன்கள், ஆறு விங் கொமாண்டர்கள், பத்து ஸ்குவார்டன் லீடர்கள், ஏழு பிளைற் லெப்டினன்ட்கள். ஆகியோரும் அடங்குவர்.

இதேவேளை ஸ்ரீலங்கா கடற்படை 11 கடற் கலங்களை இழந்துள்ளது.

இவற்றுள் ஒன்று கட்டளைக் கப்பலாகும். இரண்டு துருப்புக்காவிக் கப்பல்கள் ஆகும். மற்றொன்று தரையிறக்கும் கப்பல். இவை தவிர ஒரு சுப்பர் டோறா, மூன்று டோறாப் படகுகள், இரண்டு பீரங்கிக் கப்பல்கள் மற்றும் ரோந்துப் படகுகள் என்பவற்றை கடற்படை இழந்துள்ளது.

இவை தவிர —

தரையிறக்கு கப்பல் ஒன்றையும், விநியோகக் கப்பல் ஒன்றையும் விடுதலைப் புலிகள் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

கடற்படையில் ஐந்து லெப்டினன்ட் கொமாண்டோக்கள், ஒரு லெப்டினன்ட் இரண்டு சப் லெப்டினன்ட்கள் உட்பட 44 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

## பனங்கள்ளின் விலை குறைப்பு

தென்மராட்சி, ஜன. 31

நாளை முதலாம் திகதியிலிருந்து பனங் கள்ளின் விலை இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சி கொத்தணி முகாமையாளர் வே. கிருஷ்ணன் தெரிவித்தார்.

ரூபா ஒன்பதாக விற்கப்பட்ட ஒரு போத்தல் பனங் கள்ளு ரூபா ஏழாக விற்கப்படும். (இ-117)

# பனை, தென்னை வள கிளைகள் வன்னிக்கு

வலிகாமம் பிரதேசத்தில் இயங்கிய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கக்கிளைகள் படிப்படியாக வன்னிப்பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளன என்று வட பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக அச்சுவேலி அரியாலைக்கிளைகள் வன்னிக்கு இடம் மாற்றப்பட உள்ளன.

இவற்றை வன்னிப்பகுதியில் நிறுவுவதற்கான பூர்வாங்க வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டன என்றும் அவர் தெரிவித்தார்.


தமிழ், ஆங்கில தட்டச்சு
வேலைகளை அவசரமாகச்
செய்ய வேண்டுமா?

சிரமப் படாதீர்கள்.

குறித்த நேரத்தில், சிறந்த முறையில் அவ்வேலைகளை நாம் செய்து தருவோம்.

★ றோணியோ தட்டச்சு

வேலைகளையும் நாம் பொறுப்பேற்கிறோம்.

உதயன்
கிளை நிலையம்
சாவகச்சேரி

நவீன சந்தை, சாவகச்சேரி.



## திருமறைக்கலா மன்றம்

திருப்பலியும் கலைஞர் ஒன்றுகூடலும் எதிர்வரும் **04 – 02 – 96** ஞாயிறு காலை 10.30 மணிக்கு புனித நிக்லஸ் தேவாலயத்தில் ( மிருசுவில் ) நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகம் கொடுக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

C. M நெல்சன்
கௌரவ செயலாளர்.

திருமறைக்கலா மன்றம்
புனித நீக்லஸ் தேவாலயம்,
மிருசுவில். (40034)


## ஓர் ஈழத் தமிழர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் அவல வாழ்வை வெளிப்படுத்துவோம்.

### கிறிஸ்தவ வாழ்வின் நற்சான்று

இவருக்கு இத்தகைய ஒரு மரணம் சம்பவிக்கக் காரணமாக அமைந்தது, இவர் தெரிந்து கொண்ட வாழ்க்கை முறையென்பது இவரைக் கிறிஸ்தவ வாழ்வினது ஒரு நற்சான்றாகவும் இயேசுவைப் பின்செல்ல விழைபவர் [illegible] ஒரு சவாலாகவும் மாற்றியுள்ளது.

யாழ். பேராலயத்திலே உதவிப் பங்குத் தந்தையாக இருந்த இவர் இடம்பெயர்ந்து வந்தபோது வசதியான ஓர் இடத்தை நாடிச் செல்லவில்லை. பல வசதியீனங்கள் இருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலே வாழ வேண்டுமென்ற நோக்கத்தால் கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தைத் தன் பணித்தளமாக்க முன்வந்தார். இடம்பெயர்ந்த மக்களின் அவலத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற விருப்பில் அவர்களுக்கு வழங்கப்பட்ட சமைத்த உணவையே தாமும் உண்ண முடிவெடுத்தார், இறுதியாக இடம்பெயர்ந்த மக்களின் அவலத்தைப் பகிர்ந்து கொள்ளும் தன் முயற்சியின் பரிசாக அதன் உச்சமான நோயையும் மரணத்தையும் தழுவிக் கொண்டார்.

இளங்குருவான அவர் தனது பணிவாழ்வு பற்றிய பல கனவுகளைக் கொண்டிருந்தார். இறையரசுக் குழுமங்களை உருவாக்குவது தனது அழைப்பின் மையமென அவர் உணர்ந்திருந்தார். பணியார்வமும் அர்ப்பணிப்பும் நிறைந்த இந்த இளங்குருவின் அகால மரணம் பலரிடம் பல வினாக்களை எழுப்புகிறது.

அவரது நம்பிக்கைகள் போலியானவையா? அவரது அர்ப்பணிப்பு அநியாயமாகிவிட்டதா? அவரது இலட்சியங்கள் வெறும் கனவுகளாக கலைய வேண்டியவை தானா? மொத்தத்தில் அவருடைய வாழ்க்கை ஒரு தோல்விதானா?

வெற்றியே பெரிதென்று எண்ணி வாழுகின்ற உலகிலே இவையெல்லாம் தோல்விதான். ஆனால் தோல்வியே வெற்றி என்று சொல்லுகின்ற கிறிஸ்தவ விசுவாசத்திலே சிலுவையினால்தான் விடுதலை என்று இயேசு காட்டிய வழியிலே இவரது வாழ்வும் மரணமும் ஒரு சாதனையாகும். மனிதனுக்காகத் தன்னைக் கரைத்துக் கொண்ட இறைவனாகிய இயேசுவைப் பின்பற்றி மக்களுக்காக இவர் தன்னைக் கரைத்துக் கொண்டிருக்கிறார். இவர் கொடுத்திருக்கின்ற இத்தப் பலிஇறைவனுக்கு உகந்ததாகட்டும்.

### வாழ்க்கைக் குறிப்பு

★ வடமராட்சி கிழக்கின் அழகிய கடற்கரைக் கிராமமான செம்பியன் பற்றில் 1966-10-10 இல் திருகஸ்பார் திருமதி பற்றீஷியா தம்பதிகளுக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார்.

★ தனது ஆரம்பக் கல்வியை செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும், உயர்தர கல்விவரை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார் 1981ஆம் ஆண்டு புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்தார்.

★ கிடைத்த பல்கலைக் கழக அனுமதியைத் துறந்து தனது குருத்துவ உருவாக்கத்திற்காக கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல் லூரியில் 1886இல் இணைந்தார். 1994 இல் இறையியல் பட்டதாரியானார்.

★ 1994 ஆடி 15இல் திருத்தொண்டராக நியமிக்கப்பட்டு யாழ். பேராலயத்திலே பணியாற்றினார்.

★ 1995 பெப்ரவரி 23இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு யாழ். பேராலத்திலே உதவிப் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார்.

★ 1995 நவம்பர் 10ஆம் நாள் இடம் பெயர்ந்து வந்து, கச்சாய் புனித இராயப்பர் தேவாலயத்திலே பணிப் பொறுப்பேற்றார்.

★ டிசம்பர் முதல் வாரத்திலே ஒரு முறை காய்ச்சல் கண்டு 3 நாள்களின் பின் தேறினார்.

★ 13ஆம் திகதி மீண்டும் காய்ச்சல் கண்டது.

★ 19ஆம் திகதி இரத்தச் சோதனையின் படி நெருப்புக் காய்ச்சல் என்று கண்டறியப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

★ 25ஆம் திகதி காய்ச்சல் அதிகரித்துக் காணப்பட்டதால் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

★ 1996 - 01 - 01 காலை 10-30 மணியளவில் அதிகரித்த காய்ச்சலோடு மரணம் சம்பவித்தது. ★


உ
ஸ்ரீவிஷ்வப்பிரஹ்ம

## திருமண விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ ஆண்டு தை மாதம் 20ஆம் நாள் (03-02-96) சனிக்கிழமை முற்பகல் 11 – 10 மணி முதல் 12 34 மணி வரையுமுள்ள மேட இலக்கினமும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப வேளையில் விஸ்வகுலத்தில் பிறந்த

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி**
[Dip/Cer. in Science (Lond)]
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறைசெல்வி
**த. ஜெயந்தி**
(பட்டப்படிப்பு-நடனக்கலை)
அவர்களுக்கும்

திருமணவைபவத்தை மணமகள் இல்லத்தில் (சங்கத்தானை) நடத்துவதற்குப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றதென்பதை நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

செ. நடராசா
(தற்போதைய முகவரி:)
மணல் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

செ. தங்கராசா
பொற் தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(40290)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கரையும் வெற்றி

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் அரசாங்கம் அடைந்த இராணுவ வெற்றி மெதுவாகக் கரைந்து போகத் தொடங்குகிறது.

நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புகள் வலிகாமத்தில் நிலை கொண்டிருந்த போதிலும் —

வலிகாமத்தில் நாளாந்தம் படையினர் மீது விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு தாக்குதலை நடத்துகிறார்கள்; சிப்பாய்கள் பலியாகிறார்கள்; இராணுவ வாகனங்கள் சேதமாகின்றன; என்ற செய்திகளே வருகின்றன.

பெரும் எண்ணிக்கையான துருப்புக்களைப் பலிகொடுத்தும், கோடிக் கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டும், பெரு வெற்றியை ஈட்டியதாகக் காட்டிய பாதுகாப்பு அதிகாரிகள் இப்போது தலையில் கை வைக்கிறார்கள்!

துருப்புகளோ களைப்புற்ற நிலையில், போரிடும் ஆற்றலை இழந்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போதிலும் அரசுக்கு அது வெறும் இராணுவ வெற்றியாகவே அமைந்தது. மக்கள் எல்லோரும் கூண்டோடு இடம்பெயர்ந்து விட்டதால் அரசியல் ரீதியாகப் முழுத் தோல்வியானது.

இப்போது, இராணுவ வெற்றியும் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது!

இத்தகைய ஒரு பாதகமான நிலையில் அரசுக்கு கிழக்கிலும் இராணுவ ரீதியாகப் பெரும் சோதனை ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் அங்கும் அடுத்துத் தொடுக்குத் தாக்குதல்களை நடத்திவருகிறார்கள். நாளாந்தம் படையினர் கிழக்கின் ஏதோ ஓர் இடத்தில் சரிக்கப்படுகின்றனர்.

கிழக்கில் நான்கு வாரங்களுக்குள் விடுதலைப் புலிகளின் பலத்தை நசுக்கிவிட்டுத்தான் மீண்டும் நாடாளுமன்றம் வருவேன் என்று கடந்த பதினேழாம் திகதி சபையில் சூளுரைத்தார் அமைச்சர் அனுருத்த

அந்தச் சூட்டோடு ''சூரிய ஒளிக்கற்றை'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஒரு வாரத்தில் புலிகளைக் கண்ணாலும் காணாமல் படையினர் வெறுங்கையோடு முகாம்களுக்குத் திரும்பினர்!

இந்தப் பின்னடைவு கிழக்கில் விடுதலைப் புலிகளை இராணுவத்தினால் பலவீனப்படுத்த முடியாது என்பதனையே கோடிட்டுக் காட்டுறது.

மட்டக்களப்பில் மட்டுமன்றி அம்பாறை, திருகோணமலையிலும் — முழுக் கிழக்கு மாகாணத்திலும்— புலிகள் மிகப் பலமான நிலையில் இருக்கிறார்கள்.

அவர்களைப் பலவீனப்படுத்துவதானால், பெருமளவு படையணிகள் தேவை என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். யாழ்ப்பாணத்தில்— வலிகாமத்தில்— நிலைகொண்டுள்ள படையினரை வாபஸ் பெற்றாலே அது சாத்தியமாம்.

வலிகாமத்தை தக்க வைப்பதா? கிழக்கில் இராணுவ பலத்தை ஈட்டுவதா? எதனை இழப்பது, எதனை எடுப்பது? என்ற கேள்விகளுக்குப் பதில் காணவேண்டிய, இரண்டும் கெட்டான் நிலையில், இக்கட்டான நிலையில் அரசு நெருக்கடிக்குள்ளாகித் தடுமாறுகிறது; தலையைப் பிசைகிறது.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒரு போதும் பதிலாகாது என்பதனை இந்தக் கட்டத்திலாவது அரசினரும் சிங்களவரும் உணர்வார்களா?

# ஐ.தே.க. உட்பட சகல கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தும்

கொழும்பு, ஜன. 31

அரசின் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான சட்ட ஆவணம் குறித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுக்களை நடத்த உள்ளது.

சட்ட ஆவணம் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுடனும் பேச்சுக்களை நடத்த உள்ளதாக அந்தக்கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் கூட்டணி பேச்சுக்களை நடத்தும் என்றும்—

அதிலும் குறிப்பாக ஐ. தே க யுடனான சந்திப்பு முக்கியமானதாக இருக்கும் என்றும் அப்பிரமுகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-7)

### பர்மா பயணம்

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பர்மா சென்றுள்ளார்.

பிராந்திய ஒத்துழைப்பு. வெளிவிவகாரக் கொள்கை, வர்த்தக நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் பர்மிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார். (இ-7)

நாளை முதல்

## மோட்டார் ஊர்தி செயலகம் கொடிகாமத்தில் இயங்கும்

கோண்டாவிலில் இயங்கி வந்த தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம் நாளை முதலாம் திகதி தொடக்கம் கொடிகாமத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையக் கட்டடத்தில் யாழ். மாவட்டத்துக்கான செயலகமாகச் செயற்படும் என தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

தென்மராட்சி, வடமராட்சி பகுதியில் வசிக்கும் மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் கொடிகாமத்தில் உள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும்—

வலிகாமத்தில் இருந்து வன்னி பெருநிலப் பரப்புக்கு இடம்பெயர்ந்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## பாடசாலை ரீதியாக கலந்துரையாடல்கள்

பல்வேறு இடம்பெயர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கு அழைத்துள்ளனர். பாடசாலைகளினது கலந்துரையாடல்கள் நடைபெறும் இடங்கள், நேரங்கள் வருமாறு:-

★ தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி:- நாளை காலை 8 30 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில்

★ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை :- வெள்ளி பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்.

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை:- நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில்.

★ நல்லூர் ஸ்தானசி.சி.த.க. பாடசாலை:- இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில்.

★ கொக்குவில் இந்துக் கல்லூரி:- நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்.

★ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்:- நாளை காலை 9 மணிக்கு மறவன் புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில்.

★ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை:- நாளை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி

★ இணுவில் இந்துக் கல்லூரி:- நாளை காலை 9 மணிக்கு டிறிபேர்க் கல்லூரியில்.

★ பண்ணாகம் மெய்கண்டான் ம. வி:- இன்று பிற்பகல் 2மணிக்கு கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில்.

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி:- நாளை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்.

★ தெல்லிப்பளை யூனியன் கல்லூரி:- நாளை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில்

★ பெரியபுலம் மகா வித்தியாலயம்:- நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில்.

## பாடசாலைகளைத் தொடங்குவதற்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய நிலையில் மாணவர்களின் சீரான கல்வியைத் தொடர்வதற்கான அவசியம் குறித்தும்—

அதற்கான அனைத்து முயற்சிகள் குறித்தும்—இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

திரு. தமிழ்ச்செல்வன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளினால் இன்று எமது இனம் பல வழிகளிலும் அழிவுகளைச் சந்திக்கின்றது.

தமிழ் மக்களின் கல்வி வீணடிக்கப்படுவதும்—

இதன் காரணமாச எமது இனத்தின் பாரம்பரியங்களும் இளம் பராயத்தினரின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதும்— இன்று நாம் காணும் பாரிய பிரச்சினை ஆகும்.

இதில் இருந்து எமது சமூகத்தைப் பாதுகாக்க விரைவிலே கல்வியைத் தொடர வேண்டும் என்ற விருப்பைத் தலைவர் அவர்கள் கொண்டுள்ளார். இதன் காரணமாக கல்வியை தொடங்குவதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் விரைவாக நாம் மேற்கொள்ளவேண்டும்.

### பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள்

இன்று வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த இலட்சக் கணக்கான மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தங்கி இருந்து அளப்பரிய துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

சிறுவர்களும் இளைஞர்களும் பாரியளவிலான உளவியல் ரீதியான தாக்கங்களை அனுபவிக்கின்றனர். சமூகச் சீர்கேடான வழிகளில் அவர்கள் செயற்படுகின்றனர்.

இது எமது இனத்தின் கலாசார, பாரம்பரியங்களையும் மக்களது எதிர்கால செயற்பாடுகளையும் பாதிப்பதுடன் எமது இனத்தின் வளர்ச்சியில் பல வழிகளில் பாதிப்புக்களையும் அவலங்களையும் உள்ளடக்கும்.

மேலும் மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர முடியாத அளவுக்கு பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களது எதிர்காலம் வீணடிக்கப்படக் கூடாது.

இந்த நிலையைத் தொடரவிடாமல் சகல துறைசார்ந்தவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், இதில் ஆர்வம் எடுத்துச் செயற்பட வேண்டும். தேசியத் தலைவரது விருப்பம்போல் போராட்டத்தின் மத்தியில் கல்வியில் எந்தவிதமான தளர்வுகளும் வந்துவிடாது கல்வியைப் பாதுகாக்கவேண்டும்

அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் ஒட்டு மொத்தமாக வெளியேறி பாதுகாப்புக்காக தமது சொத்து சுகங்களை இழந்து தென்மராட்சி. வடமராட்சிப் பகுதிகளில் குடியேறினர்.

இதன் காரணமாக அரசின் நோக்கம் நிறைவேறவில்லை. அரசு தனது அடுத்த கட்ட நடவடிக்கையை இங்கு தொடங்கும் என்ற தன்மையால்—

அதிகளவான மக்கள் இங்கு இருப்பதால்—

அவர்களது உயிரிழப்புக்களைத் தவிர்க்க வேண்டி இருந்ததால்—

மக்களை வன்னிப் பெரும் நிலப்பரப்பிற்கு போகுமாறு கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதன் காரணமாக கல்வி, பொருளாதாரம், மருத்துவம் என்பவற்றுடன் இராணுவத்தால் உண்டாகும் அனைத்துத் தாக்கங்களிலிலுருந்தும் மக்களைப் பாதுகாக்க முடியும் என நாம் உணர்ந்தோம்.

### கல்வியை விரைவில் தொடர முடியும்

வன்னிப்பெரும் நிலப்பரப்பு யாழ். குடாநாட்டைப் போன்று அல்லாது புவியியல் ரீதியான அமைப்பைக் கொண்ட பாரிய நிலப்பரப்பு.

ஆகையால் இராணுவ அழுத்தம் இருக்கமாட்டாது என்பதால் அதிகளவான மக்களை அங்கு கொண்டு சென்று குடியமர்த்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதிகளவான மக்கள் அங்கு இடம் பெயர்ந்தமையால் சில சிரமங்களை உடனடியாக எதிர்நோக்கவேண்டியதாயிற்று.

இதன் காரணமாக அம்மக்கள் வன்னியிலும், மற்றும் இடங்களிலும், பாடசாலைகள், பொது இடங்கள் என்பவற்றில் தங்க வேண்டியதாயிற்று. இவ்வாறான நிலையில் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பல்வேறு இடங்களிலும் சிதறிக் காணப்பட்டமையாலும்—

இவர்கள் பாடசாலையிலும் பொது இடங்களிலும் தங்கி இருப்பதால் உடனடியாக பாடசாலைகளை தொடங்க முடியாமல் போயுள்ளமை முக்கியமானது.

எனவே விரைவில் பாடசாலைகளைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்கின்றன. இதற்கான பணியில் எல்லா அதிபர்களும், ஆசிரியர்களும், பணிப்பாளர்களும், பல்துறை நிறுவனங்களும் இணைந்து செயற்படுவதன் மூலம் எமது கல்வியை நாம் விரைவில் தொடர முடியும்.

அரசு தனது செயற்பாட்டால், அல்லலுற்ற மக்கள் மத்தியில் இன்று திட்டமிட்டவாறு சில பொய்யான வதந்திகளை மேற்கொண்டு மக்களைக் குழப்பமடையச் செய்கிறது. அதைச் சிலர் இங்கு மக்களிடையே பரப்ப முனைவது வேதனையான சம்பவம்.

இதற்கு மாறாக, மக்கள் மத்தியில் அரசினது உண்மைக்குப் புறம்பான செய்திகளை மாற்றியமைக்க, கல்வி சார் நிறுவனங்களும், அதிகாரிகளும் மக்களிடையே இன்றைய மக்களின் உண்மையான நிலையினை எடுத்து விளக்குவதன் ஊடாக நாம் இன்றுள்ள நிலைமையி் இருந்து விடுபட முடியும்.

மக்கள் எல்லா இடங்களிலும் பரவலாக குடியமர்ந்துள்ள காரணத்தினால் எல்லா மக்களுக்குமான திட்டமிடப்பட்ட நிரந்தரமான கல்விக்கொள்கையை கடைப்பிடித்து அனைத்து மாணவர்களும், தமது கல்வியை தொடர அனைவரது முயற்சிகளும் இணைக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தொடர்ந்து வலயம்இரண்டு கல்விப் பணிப்பாளர், மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இடம்பெயர்வினால் மக்கள் படும் அவலங்களையும், அவர்களது எதிர்பார்ப்புக்களையும் உணர்ச்சி பூர்வமாக அவர்கள் தெரிவித்ததுடன் இன்றைய இந்த நிலைக்கு அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

(இ)

### 24 ஆயிரம் அதிபர்கள் சட்டப்படி வேலை

அதிபர் சேவையை செயற்படுத்துவது குறித்து அனுப்பிய கடிதத்துக்கு இன்றைக்குள் பதில் அளிக்காது விட்டால் —

நாட்டில் உள்ள 24 ஆயிரம் அதிபர்களும் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரத் களுகல்ல இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-3-6)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

31 — 01 — 1996

இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8.02 — தாயகப் பாடல்கள்.
★ 8-10 — நாடகம் கருணைரவி எழுதிய ''உள்ளே வெளியே''
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

01 — 02 — 1996

காலை

★ 7.00 — ஆரம்பம்
★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7-10 — இசை மாலை
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7.45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

31ஆம் நாளில்

# இதய அஞ்சலி

அமரர்

## அருட்திரு க. யோண் லொறட்

மலர்வு: 10 - 10 - 1966

மகிமை: 01 - 01 - 1996

குருத்துவம் **23 - 02 - 1995**

செம்பியன்பற்று உருக்கொடுத்த
முதற் குருமணியே -துரை
கல்லூரி வாழ்கையும்
கிளாலி விடுமுறை நாள்களும்
நினைவில் நீங்காத நினைவலைகள்
மந்திகை வாசலிலே அன்னை சாத்திருக்க
புத்தாண்டு மகிழ்விலே சோதரங்கள் பூரிக்க
கச்சாய் பணிக்களம்
பலிக்களமாய் மாறியதோ
இடம்பெயர்வு உனக்கு
இடம் தர மறுத்ததோ
தலை சாய்க்க உனக்கு
இடம் தருவான் ஆண்டவன்
கண்ணீரைக் காவியமாக்கும்.....

யாழ். மறை மாவட்ட சகோதரங்கள்

''ஆரோபணம்'',
உருத்திரபுரம். (40458)

# அஞ்சலி ஆச்சிரம திறப்பு விழா

சாவகச்சேரி, ஜன. 31

செம்பியன்பற்றில் அஞ்சலி ஆச்சிரமம் ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ். பேராலய உதவிப் பங்கு தந்தையாகப் பணி புரிந்து, மக்களுடன் சேர்ந்து இடம்பெயர்ந்து, அவர்களுடன் வாழ்ந்த வேளை மரணமான இளம் குருவான அருட்திரு லொறட் அடிகளாரின் நினைவாகவே இந்த அஞ்சலி ஆச்சிரமம் நிறுவப்படுகிறது.

அடிகளாரின் 31 ஆம் நினைவு நாளான இன்று பி.ப 4 மணிக்கு இந்த அஞ்சலி ஆச்சிரமம் திறந்து வைக்கப் படும்.

# கல்முனைப் பகுதியிலே நேற்று குண்டு வெடிப்பு

கல்முனையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

களுவாஞ்சிக்குடியில் மற்றொரு குண்டும் வெடிக்க வைக்கப்பட இருந்ததாகவும்—

அது வெடிக்க முன் படையினர் அதனைக் கண்டு பிடித்து, செயலிழக்கச்செய்து விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ-3)


## றெனி மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடிகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்.

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

(யோகா மருந்தகத்துக்கு உள்ளே),
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(உதயன் கிளை நிலையத்துக்கு மேல்),
பிரதான வீதி,
பருத்தித்துறை. (40039)


பெரும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத முடியாது.

வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரை அகற்றி அல்லது நகர்த்தி கைப்பற்றிய பகுதியை பலவீனப்படுத்த அரசு விரும்பவில்லை. அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சிவில் நிர்வாக முறைக்கு இதனால் பாதகம் ஏற்படும் என அரசு கருதுகிறது. இதன் காரணமாக யாழ். நகரில் இருந்து படைகளை கிழக்கே நகர்த்த அரசு விரும்பாது.

இந்நிலையில் கிழக்கில் பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது— என்று அவர் குறிப்பிட்டார். (இ-3-6)

31 ஆம் நாளில்

# நீங்காத நினைவலைகள்

அமரர் அருட்திரு

## கஸ்பார் யோண் லொறட்

| உதிப்பு | குருத்துவம் | உதிர்வு |
|---|---|---|
| 10- 10- 66 | 23- 02- 95 | 01- 01- 96 |

எட்டாண்டு உருக்கொடுத்த குருமடத்தாய்
கருவறையின் கதவுதன்னைத் திறந்துவிட
பத்துமாதம் சுமந்தவர் பூரிப்புற
உடன் பிறப்புக்கள் மகிழ்வுற
உன் தோழர் நாம் களிப்புற
நிறை ஆளுமைகொண்ட நீ - மக்கள்
குறை நீக்க உழைத்தாய்
பத்துமாதம் புரிந்த பணி போதுமென்றா
மறுவாழ்வு நோக்கி நெடும்பயணம் சென்றாய்.

நின் ஆன்மா அமைதியில் இளைப்பாற
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும்,

— புனித சவேரியார் குருமடக் குடும்பம்

8 ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம். (40457)

தமிழீழ ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம், மற்றும் கடன் பத்திர தாரரின் கையொப்பத்தை உறுதிப் படுத்தி கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன்—

பின்வரும் நேர ஒழுங்குகளின் படி சமூகம் தரும் படி கோரப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நாள், நேரம் வருமாறு:

★ யாழ்ப்பாணம்:6-02-96 காலை 9-00 மணிக்கு

★ கோப்பாய்:- 06-02-96 காலை 11-00 மணிக்கு.

★ நல்லூர்;- 06-02-96 பிற்பகல் 3 00மணிக்கு

★ உடுவில்:- 08-02-96 காலை 9-00 மணிக்கு

★ மானிப்பாய்:-08-02-96 காலை 11-00 மணிக்கு

★ தெல்லிப்பளை:- 08-02-96 பிற்பகல் 3-00 மணிக்கு

★ சங்கானை:- 10-02-96 காலை 9-00 மணிக்கு

★ வேலணை அல்லது காரைநகர்;10--02-96 காலை 11-00 மணிக்கு.

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் வசிப்பவர்களின் மீட்பு நிதி மீளளிப்புத் தொடர்பாக வன்னியில் தொடர்பு கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்றும் —

இது பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும்— நிதித் துறை மேலும் அறிவித்துள்ளது.

முதல் கட்ட மீளளிப்பின் போது மீளப்பெறாத வலிகாமம்மக்களின்நலன்கருதிதேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப் பெயரும் நாளை முதல் உதயன் பத்திரிகையில் பகுதி பகுதியாக வெளிவரும். (இ)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி முத்துமணி முத்துக்குமாரு

(நல்லம்மா)

மலர்வு: **06-08-1912**

உதிர்வு: **03-01-1996**

எனது அருமை அம்மாவின் 03 - 01 - 1996 இல் நடந்த மரணச் சடங்கில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய உறவினர், நண்பர்களுக்கும், பிந்திய நாள்களில் வீட்டுக்கு வந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

எமது நிரந்தர இல்லமான உடுவிலில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வாழும் வீட்டின் உரிமையாளர் திரு.ஜி.எம். இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவரது உறவினர், நண்பர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்காக விசேடமாக நன்றியைத் தெரிவிக்கிறோம்.

வெள்ளிக்கிழமை (02-02-1996) காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும்,மதிய போசனத்திலும் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:

திருமதி தனலக்ஷ்மி சாம்பசிவம்
(மகள்)
க.ச. சாம்பசிவம்
(மருமகன்)
Dr. சா. சுதன்
(பேரன்)
மற்றும் வெளிநாடுகளில்
வதியும்
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்

முன்னைய வதிவிடம்:
''பிருந்தா''
5 ஆம் லேன்,
மானிப்பாய் வீதி,
உடுவில்.

தற்போதைய வதிவிடம்:
C/o. திரு. ஜி.எம். இராமச்சந்திரன்
பொது முகாமையாளர்,
(புலோலி M. P. C. S.)
தென் புலோலியூர்,
உபய கதிர்காமம்,
பருத்தித்துறை. (40295)

# மரண அறிவித்தல்

## குமாரசாமி இராசரத்தினம்

(உரிமையாளர், சயன்ஸ் சென்றர், மொடேர்ன் எடியுக்கேசன் சென்றர் கரவெட்டி)

குமாரசாமி இராசரத்தினம் (முன்னாள் ஆய்வு கூட உதவியாளர் ஹாட்லிக் கல்லூரி) 30 - 01 - 96 அன்று அகாலமரணமானார்

அன்னார் செல்வமலரின் அன்புக் கணவரும், தேவச்சந்திரனின் தந்தையும், குலவீரசிங்கம் (சுவிஸ்), ஜெயக்கொடி, பாலேந்திரன், புவனேஸ்வரி (வவுனியா), புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், சிறீதரன்(வவுனியா சிங்களமகா வித்தியாலயம்), சந்திரமோகன் (சுவிஸ்), யோகமலர் (கொழும்பு), விவேகானந்தன், அருளானந்தன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயபாலசிங்கம் (Glaxo Company Colombo) ஆகியோரின் சகலனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. தேவச்சந்திரன்
(மகன்)

நாவலர் மடம்,
நவிண்டில்,
கரவெட்டி. (40293)


சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் சங்கமமாக விளங்குகின்ற

# யாழ். ராசி சில்க்ஸ் (ராசி பட்டுச் சோலை)

தற்பொழுது இரு வேறு இடங்களில்

ராசி சில்க்ஸ்,
(புகையிரத நிலைய முன்பாக)
கொடிகாமம்.

(பட்டுப் புடைவைகளின் சங்கமம்)

ராசி சில்க்ஸ்,
(மகாத்மா திரையரங்கு முன்பாக)
நெல்லியடி. (சி/2943


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 31-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.